# தமிழகத்தில் ஒரே வாரத்தில் 22 படுகொலைகள்!

**முதல் பக்கத் தொடர்ச்சி**

கிருஷ்ணகிரி, பூசாரிப்பட்டிக்கு அருகே டாஸ்மாக் கடையில் ஏற்பட்ட தகராறில் அருண்குமார் என்ற இளைஞரைக் கல்லால் தாக்கிக் கொலைசெய்தனர். இதில், தந்தை மகன் என இருவரைக் கைதுசெய்திருக்கிறது போலீஸ்.

கன்னியாகுமரி மாவட்டம், காடேற்றி குளத்தில் ஆல்வின் ராஜேஷ் என்ற வாலிபர் கொலை செய்யப்பட்டு வீசப்பட்டிருந்தார். போலீஸ் விசாரணையில், சார்லஸ்



ஜோஸ் என்பவரின் மனைவியை ஆபாசமாக ஆல்வின் ராஜேஷ் பேசிய காரணத்தால், தன் நண்பர்களுடன் சேர்ந்து மது போதையில் சார்லஸ் கொன்றது தெரியவந்தது.

**ஒரே நாளில் மதுரையில் 3 கொலை!**

செப்டம்பர் 19ம் தேதி, மதுரையில் நடந்த மூன்று கொலைகள், தூங்கா நகரத்தை அலறச் செய்திருக்கின்றன. ஜெய்ஹிந்த்புரம் காவல் நிலையத்தின் அருகில், ‘ஏ ப்ளஸ்’ ரௌடியான சப்பாணியைக் கொன்று வீசிவிட்டது கொலைக்காரக் கும்பல். புஷ்பராஜ் என்பவரைக் கொன்றதற்காக, பழிக்குப்பழியாக புஷ்பராஜின் மகன் பாலமுருகன் 25 வருடங்கள் காத்திருந்து சப்பாணியைக் கொலை செய்திருக்கிறார். இந்த வழக்கில் 12 பேர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

மதுரை மாவட்டம், பெருங்குடி பகுதியைச் சேர்ந்த அன்னமயில் என்பவருக்கும், அவருடைய அண்ணன் மகனான ராஜ்குமார் என்பவருக்கும் இடையே இடப் பிரச்னை இருந்திருக்கிறது. இந்தப் பிரச்னை முற்றிய நிலையில், அன்னமயிலை அரிவாளால் வெட்டிப் படுகொலை செய்திருக்கிறார் ராஜ்குமார்.

மதுரை மேலூர் அரசு மேல்நிலைப்பள்ளியின் பின்புறம், தலையில் வெட்டுக் காயங்களுடன் இறந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டிருக்கிறார் செல்லதுரை. ‘அவரைக் கொலைசெய்தது யார்?” என்பது குறித்துக் காவல்துறையினர் விசாரித்து வருகிறார்கள்.

இந்தக் கொலைத் தாண்டவத்தில், கல்லூரி மாணவரும் தப்பவில்லை. அலங்காநல்லூருக்கு அருகேயுள்ள அ.கோவில்பட்டி பகுதியைச் சேர்ந்தவர் சஞ்சய்குமார். தன் நண்பருடன் மேலூர் நான்கு வழிச் சாலை பிரிவில் சஞ்சய்குமார் சென்றபோது, அவரை வழிமறித்து அரிவாளால் சரமாரியாக வெட்டிவிட்டு சிலர் தப்பிவிட்டனர். ரத்த வெள்ளத்தில் தன் நண்பருடன் குமாரம் என்ற ஊரில் தஞ்சமடைந்து, உயிரைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார் சஞ்சய்குமார்.

**குறட்டைவிடும் காவல்துறை... தட்டி எழுப்புவாரா முதல்வர்?**

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி அருகே கவரமலை வனப்



பகுதியில், மரக்கிளையில் அழுகிய நிலையில் ஆண் உடல் தொங்குவதை வனத்துறையினர் கண்டுபிடித்தனர். அடையாளம் தெரியாத அந்த நபர் தற்கொலை செய்து கொண்டாரா... அல்லது கொலை செய்யப்பட்டாரா என்பதைக் காவல்துறையினர் விசாரித்து வருகின்றனர்.

கன்னியாகுமரியில் ஆத்திக்காட்டுவிளையைச் சேர்ந்த செல்வி என்ற பெண் கொலை, அருந்தும்போது ஏற்பட்ட தகராறில் சரவணன் என்பவர் கழுத்தை அறுத்துக் கொலை என்று ஒரு வாரத்தில் தமிழகம் முழுவதும் கொலை வழியே ரத்தம் ஆறாக ஓடியிருக்கிறது. ஏழு நாள்களில் 22 கொலைகள் நடந்திருப்பதெல்லாம், சட்டம் ஒழுங்கு சீர்கேட்டின் உச்சம் தான்.

காவல்துறை மீதும், சட்டத்தின் மீதும் இந்தக் கொலையாளிகளுக்குத் துளியும் அச்சமில்லை என்

**காவல்துறை மீதும், சட்டத்தின் மீதும் இந்தக் கொலையாளிகளுக்குத் துளியும் அச்சமில்லை என்பதைத்தான் கள நிலவரங்கள் பிரதிபலிக்கின்றன. சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டவேண்டிய காவல்துறை, ‘நமக்கேன் வம்பு...’ என்று குறட்டைவிட்டுத் தூங்கி வழிவது, ஆட்சியின் நிர்வாகத்திறனையே கேள்விக்குறியா க்கியிருக்கிறது. காவல்துறைக்குப் பொறுப்பான முதல்வர் விஜய்தான், தூங்கி வழியும் காவல்துறையினரைத் தட்டியெழுப்ப வேண்டும். இன்னும் தூங்கிக்கொண்டிருந்தால், சட்டம்ஒழுங்கு சிரிப்பாய் சிரிப்பதோடு, இன்னும் மோசமாகும்!**

நெல்லை மாவட்டம், கீழதேவநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த ரமேஷ் ராம் கொலை, கடலூர் மாவட்டம், கீழ்கவரப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த ராமு இரும்புத்தடியால் அடித்துக் கொலை, சென்னை வண்ணாரப்பேட்டையில் மது



பதைத்தான் கள நிலவரங்கள் பிரதிபலிக்கின்றன. சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டவேண்டிய காவல்துறை, ‘நமக்கேன் வம்பு...’ என்று குறட்டைவிட்டுத் தூங்கி வழிவது, ஆட்சியின் நிர்வாகத்திறனையே கேள்விக்குறியாக்கியிருக்கிறது. காவல்துறைக்குப் பொறுப்பான முதல்வர் விஜய்தான், தூங்கி வழியும் காவல்துறையினரைத் தட்டியெழுப்ப வேண்டும். இன்னும் தூங்கிக்கொண்டிருந்தால், சட்டம் ஒழுங்கு சிரிப்பாய் சிரிப்பதோடு, இன்னும் மோசமாகும்!

**- நன்றி**
**ஜூனியர் விகடன்**
**27.09.2026**

### கரூர் – கிருஷ்ணராயபுரத்தில்

# ‘ரீல்ஸ்’ ஆட்சி எம்.எல்.ஏ.வை பொதுமக்கள் முற்றுகை!

*கரூர்.செப்.24-*

*ரீல்ஸ் ஆட்சி நடத்தி வரும் தவெக. கிருஷ்ணராயபுரம் தொகுதி எம்.எல்.ஏ.வை பொதுமக்கள் முற்று கையிட்டனர்.*

*கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் தொகுதிக்கு உட்பட்ட சேங்கல் ஊராட்சியில் மின்வெட்டு, குடிநீர் தட்டுப்பாட்டை கண்டித்து பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். போலீசார் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்தனர்.*

*போராட்டம் முடிந்து பொதுமக்கள் கலைந்து செல்லத் துவங்கிய நிலையில் சமரசம் பேச த.வெ.க கிருஷ்ணராயபுரம் தொகுதி எம்.எல்.ஏ. சத்யா வந்தார்.*

*அவரை பொதுமக்கள் சுற்றி வளைத்து வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர்.*

*கரூர் மாவட்டத்தில் அடிக்கடி அறிவிக்கப்படாத மின்தடை ஏற்படுகிறது. உரிய நடவடிக்கை எடுக்காமல் மின்வெட்டு இல்லை என்று பொய் பிரச்சாரம் செய்யப்படுகிறது.*

*விவசாயம் சிறு தொழில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆட்சியில் மின்சார வினியோகம் எந்த பிரச்சினையும் இல்லாமல் இருந்தது. மேலும் விவசாய கடன் தள்ளுபடி பிரச்சினையில் தொடர்ந்து இந்த அரசு குழப்பி வருகிறது.*

*விவசாய கடன் தள்ளுபடி யாரும் கேட்கவில்லை. உங்கள் கட்சி தலைவர் தான் ஆட்சிக்கு வந்தால் அனைத்து விவசாய கடன்களையும் தள்ளுபடி செய்வோம் என்றார். ஆனால் சொன்னபடி செய்யாமல் பல்வேறு குளறுபடி அறிவிப்புகளை வெளியிட்டு வருகின்றனர்.*

*விவசாய கடன் தள்ளுபடி செய்ய கூறுங்கள் என சரமாரியாக கேள்வி கேட்டனர்.*

*பின்னர் அங்கிருந்து எம்.எல்.ஏ. காரில் ஏறி சென்று விட்டார்.*

# மதுராந்தகத்தில் சென்னை தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் பிரச்சாரம்!

மதுராந்தகம்,செப்.24–

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தி.மு.கழக வேட்பாளர் இ.பரந்தாம னுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் கேட்டு சென்னைத் தெற்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பாகங்களில் சென்னைத் தெற்கு மாவட்ட கழகத்தைச் சேர்ந்த நிர்வாகிகள், தி.மு.கழக தொண்டர்கள், தோழர்கள், அனைத்து அணிகளைச் சேர்ந்தவர்களும் சிறப்பான தேர்தல் பணியை ஆற்றி வருகின்றனர்.

அந்த வகையில் (21–9–2026) மாலை 5 மணியளவில் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் – மேனாள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில்மேனாள் அமைச்சர் பெருமக்கள் திருவண்ணாமலை தெற்கு மாவட்ட கழக செயலாளர், கழக சட்டமன்ற கொறடா எ.வ.வேலு, எம்.எல்.ஏ., காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் – மேனாள் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், காஞ்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் ஆகியோர் பிரச்சாரக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.மகேஷ்குமார், பாலவாக்கம் க.சோமு, மாவட்ட கழக நிர்வாகிகள் பாலவாக்கம் த.விசுவநாதன், பாலவாக்கம் மு.மனோகரன், வாசுகிபாண்டியன், எஸ்.பாஸ்கரன், பகுதி கழக செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், கே.கண்ணன், மு.ராஜா, எம்.விநாயகமூர்த்தி, வே.ஆனந்தம், எஸ்.ரவிச்சந்திரன், வி.இ.மதியழகன், எஸ்.அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, நொளம்பூர் வே.ராஜன், ஒன்றியக் கழக செயலாளர் கோவிலம்பாக்கம் வெங்கடேசன், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.கே.ஏழுமலை, மின்னல் கந்தப்பன், களக்காடி எல்லப்பன், ராமாபுரம் வ.செல்வக்குமார், எஸ்.ஏ. அரிகிருஷ்ணன் மற்றும் சைதை மேற்கு பகுதி நிர்வாகிகள்: டி.என்.சிவமணி, ஆர்.ரமேஷ், அட்கோ கமலநாதன், சை.மு.சேகர், ந.தமிழரசு, எம்.நாகா, எஸ்.பி.கோதண்டம், கு.புகழ்வேந்தன், சைதைகிழக்குப் பகுதியைச் சேர்ந்த எஸ்.குணசேகரன், தா.மோகன் குமார், முருகன், ஆரி, ஜி.வரதன், க.மணி, பெ.சண்முகம், நேருநகர் எஸ்.பாட்சா, உமாபதி, சலாம், மஜீத், மகேஷ் லாரன்ஸ், ரமேஷ்குமார், கலைஞர்நகர் வடக்குப் பகுதியின் நிர்வாகிகள் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, மு.கோவிந்த ராஜன், வி.ஏ.ராஜா, எஸ்.மைக்கேல், பாஸ்கரன், விஜயகுமார், ஆர்.பாஸ்கர், பிரகாஷ், இரா.பாஸ்கர், மணிகண்டன், ரூபன், சரவணன், லோகபாரதி, ராமச்சந்திரன், கலைஞர்நகர் தெற்குப் பகுதிக் கழகத்தின் நிர்வாகிகள் வாசுகி பாண்டியன், இரா.செழியன், பூக்கடை பழனிச்சாமி, கதிரேசன், செந்தில் குமார், சதீஷ்கண்ணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



தர்மபுரியில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளை கண்டித்து தர்மபுரி மாவட்ட தொ.மு.ச. பேரவை கவுன்சில் மற்றும் இணைப்பு தொழிற்சங்கங்கள் சார்பில் மக்கள் விரோத,தொழிலாளர் விரோத மற்றும் ஜனநாயக விரோத ஒன்றிய,மாநில அரசுகளை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் அகில இந்திய தொ.மு.ச. பேரவை பொருளாளர் கோ.சி. வள்ளுவன் தலைமையில் நடைபெற்றது.ஆர்ப்பாட்டத்தில் சண்முகராஜ்,அன்புமணி, ஜெய்சங்கர்,பரமசிவம், LPF.சக்திவேல் மற்றும் துணை செயலாளர்கள் உள்ளிட்ட பல்வேறு சங்கங்களைச் சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

**சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!**

# செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

**(22.09.2026)**



**பொ**ன்னேரி அரசு மருத்துவமனையில் பெண் மீது பெட்ரோல் ஊற்றி தீ வைத்து கொல்ல முயற்சித்த த.வெ.க. நிர்வாகி பிரகாஷ் என்பவரை போலீசார் சுட்டுப்பிடித்தனர்.

திருப்பூரில் பனியன் ஆலையில் டெய்லராக பணிபுரிந்து வந்த இசக்கி ராஜா என்பவர் படுகொலை; நிறுவனத்தில் உள்ள ஜெனரேட்டர் மீது ரத்த காயங்களுடன் சடலமாக கண்டெடுப்பு.

கன்னியாகுமரி மாவட்டம் இரணியல் அருகே தென்னந்தோப்பில் அடையாளம் தெரியாத பெண் சடலம் அழுகிய நிலையில் மீட்பு; கடந்த சில தினங்களுக்கு முன்பு இரணியல் அருகே உள்ள குளத்தில் இளைஞர் ஒருவர் அடித்துக் கொலை.



தர்மபுரியில் பீடி வாங்குவதில் ஏற்பட்ட தகராறில் சுமைதூக்கும் தொழிலாளி முருகேசனுக்கு கத்திகுத்து; படுகாயங் களுடன் அரசு மருத்துவமனையில் அனுமதி.

திருப்பத்தூர் அருகே மாமூல் கேட்டு த.வெ.க. நிர்வாகி மிரட்டு வதாக சமூக ஆர்வலர் குற்றச்சாட்டு.




ஆவடி கன்னிகா புரத்தில் பட்டப்பகலில் மூதாட்டியின் வீட்டின் பூட்டை உடைத்து கொள்ளை.

மயிலாப்பூரில் இருசக்கர வாகனத்துடன் நின்று கொண்டிருந்த பெண்ணின் செல்போனை பறித்துக் கொண்டு தப்பிய 2 நபர்கள் கைது.


திருமங்கலம் பகுதியில் லிப்ட் கொடுப்பதாக இருசக்கர வாகனத்தில் அழைத்துச் சென்று கத்தியை காட்டி மிரட்டி செல்போன் பறித்துச் சென்ற வழக்கில் சரித்திர பதிவேடு குற்றவாளி கைது.

திருச்சி திருவெறும்பூர் அருகே வேலாயுதங்குடியில் பட்டப் பகலில் அடுத்தடுத்து இரண்டு வீடுகளின் பூட்டு உடைக்கப்பட்டு 19 சவரன் நகை மற்றும் 2 லட்சம் ரூபாய் ரொக்கம் கொள்ளை :



முடிச்சூரில் தொடர் கொள்ளை ஆவின் பாலகத்தில் ரூ.25,000 கொள்ளை.

தேனாம்பேட்டை பகுதியில் வீட்டில் சட்டவிரோதமாக மதுபாட்டில்களை பதுக்கி வைத்து விற்பனை செய்து, தட்டி கேட்ட நபரை கட்டையால் தாக்கிய சரித்திர பதிவேடு பெண் குற்றவாளி கைது.



காசிமேடு பகுதியில் ஒருவரை கத்தியால் தாக்கி, கொலைமுயற்சியில் ஈடுபட்ட 6 இளஞ்சிறார்கள்